பத்திரிகையானாலும் சரி உங்கள் வியாபாரம் பெருகவேண்டுமென்றால் எங்கள் ஏட்டில் விளம்பரம் செய்யுங்கள் என்றுதான் சொல்வார்கள். மதருஸ் இன்பர்மேஷன் என்று போட்டு வருகிறோம். அதில் விளம்பரங்கள் செய்யுங்கள் என்றுதான் நாம் சொல்கிறோம். அந்த முறையில் அவர்களும் கேட்டிருக்கலாம். என் நோக்கம் அவர்களுக்கு விளம்பரம் தேடித்தருவதல்ல நமது தொழில் வளர்ச்சியை பெருக்குவதுதான்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் அவர்களின் விளக்கங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மையார் வந்தார்கள் என்று சொன்னார்கள். மலரின் தன்மையைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். பொதுவாக மலர் வெளியிடுபவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். சாதாரண கடிதத்தில் அல்ல அதை எழுதியிருப்பது. கடிதத் தலைப்பில்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கங்கள் கேளுங்கள். அமைச்சர் அவர்களின் அறிக்கைக்குப் பிறகு எந்தவிதமான கேள்வியும் கூடாது. உங்களைப் பற்றிக் குறிப்பிட்டு நீங்கள் அதுபற்றி ஏதாவது விளக்கங்கள் கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம். இதை ஒரு விவாதமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றியும் குறிப்பிடுகிறேன். அது என் சொந்தக் கடிதம் அல்ல. அரசாங்க அமைச்சர் என்ற முறையில் கடிதம் எழுதியிருக்கிறேன். அதுதான் முறை. வேறு மாநில முதல் அமைச்சர்களானாலும் சரி, தொழில் அமைச்சர்களானாலும் சரி 'Chief Minister of the State or the Industries Minister of the State.' என்ற எம்ப்ளத்தோடுதான்போகும். நாம் இந்துப் பத்திரிகை, எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரம் தருகிறோம். எக்ஸிபிஷனில் விளம்பரங்கள் தருகிறோம். அதன் மூலம் கருத்துக்கள், மற்றவை பரப்பப்படுகின்றன. அமைச்சர் என்ற முறையில் எம்ப்ளம் பொறித்த காகிதத்தில் எழுதுவதில் தவறு இல்லை. அதில் குற்றம் ஒன்றுமில்லை. அது முறைதான்.

2-14 பி.ப **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த அளவில் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்று மீண்டும் மாலை 4 மணி அளவில் அவை கூடும்.

பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப்பின்—மாலை 4-00 மணி .)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசினர் மசோதாக்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) **அலுவை அலுவல் வரிசையில் மாற்றம்.**

THE HON. THIRU A. GOVINDASWAMY : Mr. Deputy Speaker, Sir, I move—

"That under Rule 21 (3) of the Legislative Assembly Rules Item IV in the Agenda, viz., *Government Resolutions* be taken up before Item III—*Government Bills.*"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.